TOR

# TIMES OF REPUBLIC

VOICE OF TAMILNADU

# டைம்ஸ் ஆஃப் ரிபப்ளிக்

அக்டோபர் 2025 | மலர் -04 | இதழ் - 7 | தமிழ் மாத இதழ் | விலை ரூ.30/-




## கரூர் துயரம்: `சிபிஐ விசாரிக்கும்; ஹைகோர்ட் கையாண்ட விதம்.!'

## கரூர் உண்மையை மறைக்க நாடகத்தை நடத்துகிறது இந்த ஸ்டாலின் அரசு


EPIC TOYOTA
URBAN CRUISER
HYRYDER
EXPERIENCE Awesome
WITH EVERY DRIVE
60 MINUTE
EXPRESS SERVICE
CAR SERVICE ON VIDEO CALL
FREE PICK & DROP
URBAN CRUISER
HYRYDER
EPIC TOYOTA
EPIC TOYOTA
MOUNT ROAD,CHENNAI | VYASARPADI, CHENNAI
9500007575 | 9500007979



நிறுவனர் & தலைமை ஆசிரியர்
**சி.நவின் பிரகாஷ்**

# தொகுப்பாளர் உரை

Tiimes of Republic நாளிதழ் சார்பாக உங்கள் அனைவருக்கும் மிலாடி நபி மற்றும் ஓணம் தின நல்வாழ்த்துக்கள். இந்த மாதம் நடைபெற்ற பேசும் பொருளாகிய விவாதங்கள், பல பிரபலமான நிகழ்வுகளை தங்களது கருத்துக்களின் மூலம் பதிவு செய்துள்ளோம். பீகாரில் வாக்காளர் அதிகார யாத்திரையில் திரண்ட கூட்டம், அதிமுகவில் பிரிந்தவர்களை சேர்க்கக் கோரி திடீரென கொடி பிடித்த செங்கோட்டையன், பாமகவில் இருந்து நீக்கப்பட்ட அன்புமணி, பாஜக கூட்டணியில் இருந்து விலகிய டிடிவி தினகரன், திருச்சியில் இருந்து சுற்றுப்பயணத்தை தொடங்கிய விஜய் போன்ற பல்வேறு சுவாரஸ்யமான தகவல்களை தாங்கி வருகிறது இந்த இதழ். இவை அனைத்தும் வாசகர்கள் இடையே மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியதோடு, பல்வேறு விவாதங்களுக்கும் வித்திட்டவை. நமது Times of Republic நாளிதழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் உங்களின் பேராதரவுடன் வளர்ந்து வரும் சக்தி வாய்ந்த ஊடகமாக திகழ்கிறது என்பதில் ஐயமில்லை. வாசகர்கள் ஆகிய நீங்கள் தான் எங்களுக்கு ஆணி வேர். உங்களால் தான் இமயத்தை தொட முடியும். என்றும் உங்கள் ஆதரவோடு பயணிக்கிறோம்.

**– Times of Republic**
**குழுவின் சார்பாக நன்றிகள்!**



முதன்மை ஆசிரியர்
**ஜெ. சாமிநாதன்**

# தலையங்கம்

**அண்டை நாடுகளில் புரட்சி- சொல்வது என்ன?**

அண்டை நாடுகளான இலங்கை, வங்கதேசம், நேபாளத்தில் மக்கள் புரட்சி ஏற்பட்டு, ஆட்சி மாற்றம் கண்டுள்ளதை கண்கூடாக பார்த்தோம். 2022 முதல் நடப்பாண்டு வரை 3 ஆண்டுகளிலேயே இவை நிகழ்ந்ததன் காரணம் ஒன்று மட்டுமே. மக்களுக்கும், ஆட்சியாளர்களுக்கும் இடையே உருவான மாபெரும் இடைவெளி தான். மூன்று நாடுகளிலும் மக்களாட்சி நடைபெற்றாலும், அதிகார போதையில் மமதையில் மக்களின் வாழ்வாதாரத்தை கண்டுகொள்ளாமல் தங்கள் இஷ்டத்துக்கு வாழ்ந்ததன் விளைவை அனுபவித்து வருகிறார்கள். இலங்கையில் கொடிகட்டிப் பறந்த ராஜபக்சே குடும்பம், அதே நாட்டில் பேச்சு மூச்சு இல்லாமல் ஒடுங்கி போய் கிடக்கிறது. வங்கதேச தந்தை எனப்படும் முஜிபுர் ரகுமானின் மகளான பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா, நாடு தப்பி, இந்தியாவில் தஞ்சம். அடுத்து நேபாளத்தில் மூன்றே நாளில் முடிக்கப்பட்ட சர்மா ஒலியின் ஆட்சி. மக்கள் புரட்சிக்கு முன்னால் ஆட்சியாளர்களின் அகங்காரம் செல்லுபடியாகாது என்பதற்கான சாட்சிகள் இவை. அதிகார போதையில் எதிர்க்கட்சிகளை வஞ்சிப்பது, மக்களுக்கு எதிரான சிந்தனை, கருத்துக்களை விதைப்பது, ஒடுக்குவது, ஒருசாராரை குறிவைத்து தாக்குவது, வேண்டியவர்களுக்கு எல்லாம் செய்வது, பகட்டு வாழ்க்கை எல்லாம் தூசுதான். அரசியல் அமைப்பில் ஒவ்வொரு அமைப்புக்கும் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை தனக்கென மாற்றி அமைத்து, மிரட்டல் மூலம் சாதிக்க நினைத்தால் கிடைப்பது என்னவோ அதுதான். சாது மிரண்டால் காடு கொள்ளாது என்ற வாசகத்தை முன்னோர்கள் சும்மா சொல்லி வைக்கவில்லை.

# TIMES MAGAZINE


## Editor & Publisher



சி.நவீன் பிரகாஷ்

## Editor-in-Chief



ஜெ.சாமிநாதன்

## Advisory Panel

சேகர், எஸ்.பி., (சிறைத்துறை ஓய்வு)



அஜய் பென்சமின்


## Legal Advisors



ஆர்.சி.பால்கனகராஜ்



கிருஷ்ணகுமார்



அக்பர்பாஷா



கார்த்திக்



ஜெ.ரூபன்

## Chief Reporters



எஸ்.ஜாகீர் ஹுசேன்

டி.தாகூர்

பி.ஹரிஹரசுதன்



கே.கார்த்திகேயன்

ஜெ.நவநீதகிருஷ்ணன்



எஸ்.நடராஜ்



பா.சிவக்குமார்

சி.எஸ்.ஆர்.ஜீவன்

## Administration & Operations



ஆரத்தி . தி
Administration & Operations head



பி. அரசுகுமார்
Senior Video Editor



பா. சுகேஷ்
Senior Video Editor



கதிரேசன் தா
VIDEO EDITOR



நவீன் ராகவேந்திரா மா
Video Editor



ஆண்டோ. எம்
Graphic Designer



பா . சதீஷ் குமார்
Graphic Designer



மோ . யோகலக்ஷ்மி
Graphic Designer




ஆர். மேரில்பேர்ட் தாஸ்
Voice Over Artist

திலகா
Voice Over Artist




ராதிகா நெடுஞ்செழியன்
Voice Over Artist


## Associate Digital News Contributors:




| | | | | | |
|---|---|---|---|---|---|
| கே.கோபிநாத் | சரண்யா | விக்னேஷ் | பெரியசாமி | ஆர்.மணிகண்டன் | மதிநாதுள் முசால்மாத் |




| | | | | | |
|---|---|---|---|---|---|
| தாமரைக்கனி | கோகுலகிருஷ்ணன் | கே.செல்வம் | சைரில் | எஸ்.கவியரசு | பி.வினித்குமார் |




| | | | | | |
|---|---|---|---|---|---|
| செந்தில்குமார் | எம்.அரிகாந்த் | கோபிஆனந்த் | எம்.ரிசேஷ் ராஜ் | மாதுரி | டி.விக்னேஷ் |




| | | | | | |
|---|---|---|---|---|---|
| பிரமோத் | ஓம் பிரகாஷ் கவுர் | மனோ | இ.பிரசாந்த் | கிளாட்சன் ரிட்சர்ட் | ஹரி பாலசந்திரன் |




| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜானி ஆம்புரோஸ் | பிரசாத் பெருமாள் | பிரணவ் | சரத்குமார் | ஜெ.எபினேசன் | பி.விக்னேஷ் |




| | | | | | |
|---|---|---|---|---|---|
| சாந்தகுமார் | கே.சித்தார்த்தன் | தினேஷ்கவுர் | தினகரன் | அருணாச்சலம் | தீனதயாளன் |




| | | | | | |
|---|---|---|---|---|---|
| கே.என்.சி. சரவணகுமார் | சங்கீதா | ஏ.நரேஷ்குமார் | ஏ.பிரேம்குமார் | எஸ்.ஐ. நாராயணன் | பிரபா |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| பாஸ்கோ மாணிக்கம் | சேகர் | ரேவதி | கே.கார்த்திகேயன் | கே.வி.பாலச்சந்திரா | ஜி.சதீஷ்குமார் |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| சாமுவேல் | பார்த்திபன் | ஜெ.மோகன்குமார் | சஸ்ஸன் | யூ.ராகுல் | சதீஷ் |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| எம்.கிருஷ்ணகுமார் | சாந்தகுமார் | ஏ.தினேஷ் | மகிமான் | நாராயணசாமி | பிரவீன் |

# கரூர் துயரம்: `சிபிஐ விசாரிக்கும்; ஹைகோர்ட் கையாண்ட விதம்.!'

## - உச்ச நீதிமன்ற அதிரடி..



கரூர் கூட்ட நெரிசல் விவகாரத்தை சிபிஐ விசாரணைக்கு மாற்றி உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும் இந்த விசாரணையை உச்ச நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையிலான குழு கண்காணிக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

தமிழக வெற்றி கழகத் தலைவர் விஜய் கரூரில் நடத்திய தேர்தல் பரப்புரை கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக தமிழக அரசு ஓய்வு பெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் தனிநபர் ஆணையத்தை அமைத்திருந்தது.

இது தொடர்பான விவகாரத்தை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம் சிறப்பு விசாரணைக் குழுவை அமைத்து உத்தரவிட்டிருந்தது. சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை தொடர்பான வழக்கை விசாரித்து தமிழக வெற்றிக்கழகம் மற்றும் கட்சியின் தலைவர் விஜய்க்கு எதிராக விமர்சனங்களை முன் வைத்திருந்தது.

இதற்கிடையில் உயர் நீதிமன்றத்தில் தங்களுக்கு எதிரான கருத்துக்களை நீக்க கோரியும், சிறப்பு விசாரணை குழுவுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தது. அதேபோல



கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தாரை சேர்ந்தவர்களும் சிபிஐ விசாரணை கேட்டு மனு தாக்கல் செய்திருந்தார்கள்.

பாஜகவை சேர்ந்த வழக்கறிஞர் ஜி.எஸ் மணி என்பவரும் தனியாக வழக்கு தொடர்ந்திருந்தார். மொத்தம் ஐந்து மனுக்களை கடந்த வாரம் விசாரித்த உச்ச நீதிமன்றம், மனு மீதான உத்தரவை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்திருந்தது.

இந்நிலையில் இன்று உச்ச நீதிமன்ற நீதிபதி ஜே.கே மகேஸ்வரி மற்றும் அஞ்சாறியா ஆகியோர் அடங்கிய அமர்வு விரிவான உத்தரவை பிறப்பித்தது.

தீர்ப்பில் சொல்லப்பட்டது என்ன?


தீர்ப்பை வாசித்த நீதிபதிகள், இந்த விவகாரத்தை





















குடிமக்களின் அடிப்படை உரிமை சார்ந்த விவகாரமாக தாங்கள் கருதுவதாகவும் வெளிப்படைத்தன்மையுடன் பாரபட்சம் இல்லாத விசாரணையை இது போன்ற விவகாரங்களில் கேட்பது குடிமக்களின் உரிமை என்பதை சந்தேகத்திற்கு இடமில்லாமல் நாங்கள் நம்புவதாகவும் தெரிவித்தனர். அதனால் இந்த வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றுவதாக நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

அதே நேரத்தில் சிபிஐ



விசாரணையை மேற்பார்வையிட மூன்று பேர் கொண்ட குழுவை தாங்கள் அமைத்திருப்பதாகவும், இந்த குழுவுக்கு ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமை தாங்குவார் என்றும் இரண்டு மூத்த காவல்துறை அதிகாரிகள் இந்த குழுவில் இடம் பெற்று இருப்பார்கள் என்றும் இந்த இருவரும் தமிழ்நாடு பிரிவு ஐபிஎஸ் அதிகாரிகளாக இருக்கலாம். ஆனால் தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்டவர்களாக இருக்கக்கூடாது என நீதிபதிகள் தெளிவுபடுத்தினர்.

அதே நேரத்தில் இந்த மூன்று பேர் குழு கரூர் கூட்ட நெரிசல் விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்தலாம் என்றும் தேவைப்பட்டால் எந்தத் தருணத்தில் வேண்டுமானாலும் உச்ச நீதிமன்றத்தை அவர்கள் நாடலாம் என்றும் நீதிபதிகள் உத்தரவில் கூறினர்.

தமிழக வெற்றிக் கழகம், விஜய் - ஜிகூஷிரி, கூஷிவீழீணீஹ்

தமிழக வெற்றிக் கழகம், விஜய் - ஜிகூஷிரி, கூஷிவீழீணீஹ்

சிபிஐ தங்களது மாதாந்திர விசாரணை அறிக்கையை இந்த குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

நீதிபதிகள் உத்தரவை வாசித்து முடித்தவுடன் குறுக்கிட்ட மூத்த வழக்கறிஞர் அபிஷேக் மனு சிங்வி, 'இந்த விவகாரத்தில் இரண்டு மனுதாரர்கள் தங்களது ஒப்புதலே இல்லாமல் உச்ச நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்த செய்யப்பட்டு இருப்பதாக புகார் தெரிவித்திருக்கிறார்கள்.

இதில் மிகப்பெரிய சதி இருக்கிறது எனவே இதை விரிவாக விசாரிக்க வேண்டும். இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று' என கூறினார். 'நிச்சயமாக அது குறித்து விசாரிக்கப்படும்' என உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர்.









சென்னை உயர்நீதிமன்றம்
சென்னை உயர்நீதிமன்றம்
உயர் நீதிமன்றம் மீது அதிருப்தி!
மேலும் சென்னை உயர் நீதிமன்றம் கரூர் கூட்ட நெரிசல் விவகாரத்தை கையாண்ட விதம் குறித்தும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தங்களது கண்டனங்களை தெரிவித்தனர். கூட்ட நெரிசல் விவகாரம் தொடர்பாக தமிழ்நாடு முதல்வர் ஒய்வு பெற்ற நீதிபதி தலைமையில் ஒரு நபர் ஆணையத்தை நியமித்த பிறகு உயர் நீதிமன்ற மதுரை கிளை நீதிபதி எவ்வாறு இதில் தானாக முன்வந்து விசாரணை மேற்கொண்டு உத்தரவுகளை பிறப்பித்தார் எனவும் நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

மேலும் கூட்ட நெரிசல் ஏற்பட்ட கரூர் பகுதி சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை நீதி வரம்பிற்குள் வருகின்றது. அப்படி இருக்கும் பொழுது உயர் நீதிமன்ற முதன்மை அமர்வு இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு தன்னிச்சையாக எப்படி விசாரணை குழுவை அமைத்தது என்றும்

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

மிகவும் நுணுக்கமான இந்த விஷயத்தை சென்னை உயர் நீதிமன்றம் இப்படி கையாண்டிருக்கக் கூடாது என அதிருப்தி தெரிவித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள், 'ஒரு ரிக் மணுக்களை எவ்வாறு விசாரிக்க வேண்டும் என்ற வழிகாட்டு நெறிமுறைகள் ஏற்கனவே இருக்கக்கூடிய நிலையில் அவை பின்பற்றப்பட்டதா என்பது குறித்து உயர் நீதிமன்றத்தின் தலைமை பதிவாளர் பதிலளிக்க வேண்டும்' என உச்ச நீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

'எங்கள் நீதிபதி ஒருவரை நியமித்து இருக்கிறோம்'

"கரூர் கூட்ட நெரிசல் விவகாரத்தில் அனைத்து உண்மையும் வெளிவர வேண்டும் என நாங்கள் நினைக்கிறோம். அதனால் தான் எங்கள் நீதிபதி














ஒருவரை விசாரணையை கண்காணிக்க நாங்கள் நியமித்து இருக்கிறோம். விசாரணை முடியட்டும் யார் செய்தது தவறு என்பது தெரிந்துவிடும் ”என உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கருத்து தெரிவித்து அனைத்து மனுக்கள் மீதான விசாரணையை தொடர்ந்து நடைபெறும் என அறிவித்தனர்.

கரூர் கூட்ட நெரிசல் சோகக் காட்சிகள்

அதே நேரத்தில் மனுதாரர்கள் சிலர் தங்களுக்கு தெரியாமலேயே மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதாக புகார்கள் தெரிவித்துள்ள விவகாரம் தொடர்பாக தமிழக அரசு பதிலளிக்க கால அவகாசம் வழங்கியதோடு ஏற்கனவே தமிழக அரசு சில விவகாரங்களில் பதிலளிக்க பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கும் கால அவகாசம் நீட்டிக்கப்பட்டு வழக்கின் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.


fast track
Taxi App
Chennai is Calling
Pick up & Explore
ANYWHERE WITHIN A CITY
LOCAL TRIP !
AVAILABLE ALL OVER TAMILNADU !
Local
Package
Select Package
Plan your
fast track
044 2888 9999 | 6000 6000
DOWNLOAD THE FASTTRACK TAXI APP
SCAN TO DOWNLOAD APP

PeeYesYem | HYUNDAI
DRIVE TO SUCCESS

HYUNDAI

# Bring Home a PeeYesYem Hyundai CRETA Electric today!




## Undisputed. Ultimate. Now electric.

Contact Now
9600114000

**PEEYESYEM HYUNDAI**
Chennai | Madurai | Tuticorin | Ramnad | Karaikudi | Sivagangai | Kovilpatti | Tiruchendur





**TIMES OF REPUBLIC TAMIL MONTHLY RNI. NO: TNTAM/2022/82294**

**Owned Published and printed by C.NAVIN PRAKASH, Published from NO,33 PRINCE VILLAGE APTMS, PHASE 2 BLOCK NO C15, DOOR NO.303 ILAIYA MUDALI STREET TONDIARPET, CHENNAI-.600081. & printed at SEKAR OFFSET PRINTERS, No.168/50, BIG STREET, CHEPAUK, Chennai - 600 005. Editor C.NAVIN PRAKASH**